IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.

PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா. 8 { Prosecution PW.8
{ Defence
{ Court

1. Name : திருமதி. மாரியம்மாள்

2. Husband Name : மாயாண்டி

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடகண்டம், கரைவீரன் காலனிதெருவில் குடியிருந்து வருகிறேன். எனது கணவர் பெயர் மாயாண்டி. நான் விவசாய கூலிவேலை

செய்துவருகிறேன். இவ்வழக்கு எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது.இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரப்பட்டதன் அடிப்படையில், வழக்கின் சூழலை கருத்தில் கொண்டு அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரணை செய்ததாகவும், அவ்வாறு விசாரித்தபோது கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 9 மணியளவில் நான் வடகண்டம் கடைதெருவிற்கு மளிகை பொருள் வாங்குவதற்காக வந்தபோது, திருவாரூர் - கும்பகோணம் மெயின்ரோட்டில் எங்கள் தெரு பிரியும் இடத்திடம், திருக்கண்ணமங்கை குஞ்சுப்பிள்ளை மகன் முரளி மற்றும் அவரது அப்பாவான மேற்படி குஞ்சுப்பிள்ளை, அவரது அண்ணன் முத்துகிருஷ்ணன் ஆகிய இருவரும் இருச்சக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கு பின்னால் திருக்கண்ணமங்கையை சேர்ந்த தமிழ்வாணன், தமிழ்குமரன் ஆகிய இருவரும் ஏற்கனவே முன்விரோதம் காரணமாக மேற்படி முரளி மற்றும் அவருடன் வந்த நபர்களை அடித்துக்கொண்டு வந்தவர்கள் எங்கள் தெரு பிரியும் இடத்தில், அவர்கள் வந்த வண்டியை மறைத்ததாக, சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் மறித்ததில் முரளி தடுமாறி வண்டியை என்மீதும், அங்கு நின்றுக்கொண்டிருந்த ஸ்ரீவெளி, பக்கிரிசாமி மகன் பசுபதி மீதும் மோதி கீழே விழுந்ததாகவும் போலீசார் விசாரணையில்

சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு மோதியதில் எனக்கும், மேற்படி பசுபதிக்கும் கை,கால்களில் ரத்தக்காயம் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கீழே விழுந்த முரளியை பார்த்து, எதிரிகள் தமிழ்வாணனும் அவரது தம்பி தமிழ்குமரனும் தகாத வார்த்தைகளால் பேசி, எங்களையாடா வெட்டினிங்க, உங்களை வெட்டிக்கொல்லாமல் விடமாட்டோம், என்றுசொல்லி அருவாளால் முரளியின்தலைமீது வெட்டிபோது அவர் விலகிக்கொள்ள அந்த வெட்டு முத்துகிருஷ்ணன் தலையில் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், தமிழ்குமரன் தான் கையில் வைத்திருந்த ஆணிபிடுங்கும் கம்பிபாரையால் முத்துகிருஷ்ணன் தலையிலும், வலது கையிலும் வலது பக்க விலா எலும்பிலும் அடித்துக்காயப்படுத்தினார் என்றும், அதை பார்த்து தடுக்க சென்ற மேற்படி குஞ்சுப்பிள்ளையையும் வலது கை, இடது கையில் தமிழ்குமரன் மேற்படி கம்பிபாரையால் அடித்து காயப்படுத்திய சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியிள்ளேன் என்று சொன்ானல் சரியல்ல. அந்த சமயத்தில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த தமிழ்வாணனின் உறவினர்கள் நான்குபேரும் தமிழ்வாணனிடம் டேய் விடாதீங்கடா என்றும் தகாத வார்த்தைகளால் திட்டியும், முரளி, அவரது அப்பா, அண்ணன் ஆகியோர்களை கைகளால் மாறி மாறி அடித்ததாகவும், என்னைக்கிருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி விட்டு சென்றதை பார்த்தாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நானும், சிகிச்சையிலிருந்ததாகவும், அப்போது குடவாசல் காவல்நிலைய ஆய்வாளர் என்னை விசாரணை செய்ததாகவும், நடந்த உண்மை விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற இந்த வழக்கு சம்பவம் குறித்து எதுவுமே தெரியாது என்பதுபோல தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:54:51 +0530